### ஒன்றிய அரசுக்குச் செலுத்தப்படும் வரிகளின் மூலம் ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படும் வரித் தொகுப்பில் இருந்து – மாநிலங்களுக்கு

# 50 சதவிகித நிதிப் பகிர்வும் - தமிழ்நாட்டிற்குரிய நிதிப் பகிர்வும் உறுதி செய்யப்பட வேண்டும்!

## சட்டப் பேரவையில் – நிதி அமைச்சரின் தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் – தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 8-**

**ஒன்றிய அரசுக்கு செலுத்தப்படும் வரிகளின் மூலம் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் பகிர்ந்து அளிக்கப்படக்கூடிய வரித் தொகுப்பில் இருந்து மாநிலங்களுக்கு 50 சதவிகிதம் நிதிப் பகிர்வு உறுதி செய்யப்படுவதுடன், அதில் தமிழ்நாட்டிற்கு உரிய நிதிப்பகிர்வும் உறுதி செய்யப்பட வேண்டும்” என்று சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் பேசுகையில் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு தொடர்பாக அரசு கொண்டு வந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:

இன்று முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள். மாநில சுயாட்சிக் கொள்கைகளுக்காகவும், மாநில உரிமைகளுக்காகவும் தன்னுடைய வாழ்நாளெல்லாம் போராடிய மகத்தான தலைவர் கலைஞரின் துயிலிடத்தில் தொழுது வணங்குகிறேன்.

மாநில அரசின் சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை திமுக வரவேற்கிறது. அதே நேரத்தில் அதில் முக்கியமான திருத்தம் ஒன்றை முன்மொழிவது என்னுடைய கடமை. தீர்மானத்தின் நான்காவது பத்தியில் இந்திய அரசியலமைப்பின் நிதிசார் கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு இணங்க, ஒன்றிய அரசுக்கு செலுத்தப்படும் வரிகளின் மூலம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் வரித்தொகையில் 50 சதவீத நிதிப் பகிர்வை உறுதி செய்ய வேண்டும் என்ற திருத்தம் இடம்பெற வேண்டும். அதனுடன் தமிழ்நாட்டிற்குரிய உரிய பங்கும் உறுதி செய்யப்பட வேண்டும்.



16வது நிதிக்குழுவிடம் தமிழ்நாடு அரசு ஏற்கனவே வலியுறுத்திய நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், மாநிலங்களுக்கான 50 சதவீத நிதிப் பகிர்வு தீர்மானத்தில் வெளிப்படையாக இடம்பெற வேண்டும். தற்போதைய தீர்மானம் மிகவும் பொதுவான வடிவில் இருக்கிறது. இந்த விவாதம் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் நிதியைப் பற்றிய விவாதம் மட்டுமல்ல, இந்திய கூட்டாட்சியின் எதிர்காலம் குறித்த விவாதமாகவும், மாநில உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விவாதமாகவும் இது அமைந்துள்ளது.

மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசுக்கும் இடையிலான அதிகார மற்றும் பொறுப்புகளின் சமநிலையே இந்திய கூட்டாட்சியின் அடித்தளம். ஏனெனில், இந்திய கூட்டாட்சியின் வலிமை மாநிலங்களின் வலிமையில்தான் இருக்கிறது. பேரறிஞர் அண்ணா கூறியதுபோல், ஒன்றிய அரசின் வலிமை என்பது தனிப்பட்ட அதிகாரத்தில் அல்ல; மாநிலங்களின் ஒட்டுமொத்த வலிமையின் வெளிப்பாடாகும். மாநில அதிகாரங்களை ஒன்றிய அரசு தொடர்ந்து குவித்துக் கொண்டால் மாநிலங்கள் பலவீனமடையும்; அதனால் ஒன்றிய அரசுக்கு புதிய வலிமை உருவாகாது என்ற அண்ணாவின் கருத்து இன்றும் பொருந்துகிறது.

கடந்த ஆட்சியில் நிதி ஆயோக் கூட்டங்களிலும் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெளிவாக எடுத்துரைத்தார். தற்போதைய சூழலில் மாநிலங்களின் வருவாய் ஆதாரங்கள் தொடர்ந்து குறைந்து வருகிறது. மாநிலங்களின் சட்டப்பூர்வ அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படுகிறது. அதே சமயம், மக்களின் அனைத்து எதிர்பார்ப்புகளும் மாநில அரசுகளையே நோக்கி அதிகரித்து வருகிறது. குறிப்பாக செலவுப் பொறுப்புகள் மாநிலங்களிடம் இருக்கின்றன. ஆனால் வருவாய் ஆதாரங்கள் ஒன்றிய அரசிடம் குவிந்துள்ளன. இந்த முரண்பாட்டை சரிசெய்யாமல் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சியை உறுதி செய்ய முடியாது.

தமிழ்நாடு இன்று நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக திகழ்கிறது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 சதவீத பங்களிப்பையும், மொத்த ஏற்றுமதியில் 11 சதவீத பங்களிப்பையும் வழங்குகிறது. உற்பத்தித் துறையில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதோடு, தொழிற்சாலைகள், பெண் தொழிலாளர் பங்களிப்பு, மனிதவள மேம்பாடு, கல்வியறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது.

இந்த வளர்ச்சியே இந்திய பொருளாதாரத்தின் முக்கிய தூணாக தமிழ்நாட்டை மாற்றியுள்ளது. தமிழ்நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதம் 11.19 சதவீதமாகவும், தனிநபர் வருமானம் ரூ.3.63 லட்சமாக உயர்ந்திருக்கிறது. மாநிலத்தின் சிறந்த நிதி ஒழுங்கு, வரி வசூல் திறன் உள்ளிட்ட அம்சங்கள் இருந்தபோதிலும், நிதிப் பகிர்வில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது.

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் வெறும் 29 பைசா மட்டுமே திரும்ப கிடைக்கிறது. அதே நேரத்தில் உத்தரபிரதேசத்திற்கு ரூ.2.73, பீகாருக்கு ரூ.7.06 வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் நமக்கு எந்த எதிர்ப்பும் இல்லை என்றாலும், தமிழ்நாடு மட்டும் ஏன் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது என்பதே எங்களது கேள்வி.

ஜிஎஸ்டி அமலுக்கு வந்த பிறகு மாநிலங்களின் நிதிசார் சுயாட்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எந்த பொருளுக்கு எவ்வளவு வரி விதிக்க வேண்டும் என்ற அதிகாரத்தை மாநிலங்கள் இழந்துவிட்டது, வருவாய் அதிகாரங்கள் அனைத்தும் ஒன்றிய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி கவுன்சிலில் விகிதக் குறைப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டபோது, மாநிலங்களின் வருவாய் பாதிக்கப்படும் என்று தமிழ்நாடு முன்கூட்டியே எச்சரித்தது, தற்போது அதுவே நடைமுறையில் உண்மையாகியுள்ளது.

ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாநிலங்களின் நிதிச்சுமை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. முன்பு 25 சதவீதமாக இருந்த மாநில பங்களிப்பு தற்போது 40 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதனுடன், வரித் தொகை பகிர்விற்கு வெளியே செஸ் மற்றும் சர்சார்ஜ் வசூலின் மூலம் ஒன்றிய அரசு பெருமளவு நிதியை தன்னிடமே வைத்துக் கொள்கிறது, அதற்கான இழப்பீடு குறித்து இதுவரை தெளிவான விளக்கம் அளிக்கப்படவில்லை.

9வது நிதிக்குழு காலத்தில் தமிழ்நாட்டின் வரிப் பகிர்வு 7.93 சதவீதமாக இருந்த நிலையில், 15வது நிதிக்குழுவில் அது 4.079 சதவீதமாக குறைந்திருக்கிறது. 16வது நிதிக்குழுவிலும் தமிழ்நாடு வலுவான வாதங்களை முன்வைத்தபோதிலும், கிடைத்த உயர்வு வெறும் 0.018 சதவீத புள்ளியாகத்தான் இருந்தது.

கேரளா மற்றும் கர்நாடகாவுக்கு அதிகளவில் உயர்வு கிடைத்திருப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும், தமிழ்நாட்டின் நிதி ஒழுங்கு, வரி வசூல் திறன், மனிதவள மேம்பாடு, நகரமயமாக்கல், முதியோர் மக்கள் தொகை அதிகரிப்பு, ஓய்வூதியச் சுமை போன்ற தனித்துவமான அம்சங்கள் நிதிக்குழுவால் போதுமான அளவில் கருத்தில் கொள்ளப்படவில்லை. இந்த அனைத்து காரணங்களையும் கருத்தில் கொண்டு, மாநிலங்களுக்கு வழங்கப்படும் வரிப் பகிர்வு 50 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும், அதில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கை உறுதிசெய்ய வேண்டும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

---

### மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு.எம்.எல்.ஏ. முன்னிலை! பா.ஜெகதீஷ் தலைமை!

## சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கலைஞர் நினைவு நாள் - ரத்ததான முகாம்!

### டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு துவக்கி வைக்கிறார்!

சென்னை,ஆக.8-

சென்னை கிழக்கு மாவட்டம் மாவட்ட இளைஞரணி சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் ரத்ததான முகாம் போராளி 3 ““உடல் நலம் காக்க குருதி கொடுப்போம் சூரியன் உதிக்க உறுதி எடுப்போம் எனும் தலைப்பில் 9/08/26 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் சென்னை, திருப்பள்ளித் தெருவில் உள்ள சிவாஞ்சி பவனில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ் தலைமையில்,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் வானவில் விஜய்,

எம் விஜயகுமார், ஜி.எம். தேவன், பி ஸ்ரீராமுலு ,இசட் ஆசாத்,,என் பி எம் ஷேக் அப்துல்லா,ராஜேஷ் ஜெயின்,இப்ராஹிம் கனி,இரா.கலைச்செல்வி, நா.ரஞ்சித் விஜயாலயன், பி. விஜயகுமார், எல். சம்பத்குமார்,எம்.விநாயகம் வெ.பரிமளம்,கே.ஆர்.அபரஞ்சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே ஜனார்த்தனன், கே ஆர் அபரஞ்சி, மா முத்துக்குமார், ந. சுந்தரம், எஸ் சந்தியாகு, வி. சந்தான லட்சுமி, சி.ப. ஜெயராமன், ஜெ. பாலமுருகன் ,ஜி ஜே பிரபு, எஸ் தனசேகர், க. வினோத், ஆர்.டி சங்கர் நானா ஆ.நா.பார்த்திபன்,கே கவியரசு, எல் சத்யநாராயணன், எஸ் புகழேந்தி,ஆர் ஏ அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா,எம். பரத்குமார்,,மா. ஜெய்சங்கர், ஜி.ராம்மூர்த்தி,பா.அண்ணாதுரை, டி சதீஷ்குமார்,வே. பா.பிரபாகரன்,நா மோகன் பி செந்தில்குமார், ஏ.திருப்பதி. எம் சண்முகசுந்தரம், பா அஜித்குமார்,கே ஆர் மணிரத்தினம்,எம் தமிழ்வாணன், ஆர். சுமன்ராஜ், பா விஷ்ணு, சக்கரவர்த்தி, க பாலாஜி, டி பிலிப்ஸ், எஸ் இம்ரான் கான், எஸ். வினோத்குமார், வி.எல். யஷ்வந்த் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்த ரத்ததான முகாமை கழக மருத்துவ அணி தலைவர் கழக செய்தி தொடர்பாளர் டாக்டர் கனிமொழி என்.வி. என்.சோமு அவர்கள் துவக்கி வைக்கிறார்.

மேலும் இப் புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன் தயாநிதி மாறன் எம்பி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி, இரா.கிரிராஜன் எம்பி, ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எஸ் மணி முடி, வே.உமாகாந்த், பி கே மூர்த்தி, கே எஸ் எம். நாதன், கே சந்துரு, சி. மகேஷ் குமார், தேடல். புருஷோத்தமன் மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், ஜி எம் தேவன்,புனிதவதி எத்திராஜன், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே வாசு, ஐசிஎப்.வ.முரளிதரன், எ நாகராஜன், ஜோசப் சாமுவேல், டிஎஸ்பி ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, சொ. வேலு, வி சுதாகர், , பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,கோ மணி, எம் பி உதய சங்கர், சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி. பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நா ரஞ்சித் விஜயா லயன், எல் பி எஃப் மோகன், ஜி தாமோதரன், நா துலுக்கானம், கு.கிருஷ்ண மூர்த்தி, ஆர் எஸ் சித்திக், இரா வீரமணி, ம.அசோக் குமார் எம் விநாயகம், எம். பெரோஸ் கான்,சுதா தீனதயாளன் ,ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இம்முகாமில் பா. கதிரவன், ஆர் ரவிச்சந்திரன் நன்றி கூறுகிறார்கள்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அலங்கரிக்கப்பட்ட அவருடைய திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து 500க்கும் மேற்பட்டோருக்கு காலை.சிற்றுண்டியை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் வழங்கினார். ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன். சசிகுமார் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

